செ.வெ.எண்:08 நாள்:03.10.2021

# திருப்பூர் மாவட்டம் குடிமங்கலம் ஊராட்சி ஒன்றிய பகுதிகள் மற்றும் திருமுருகன்பூண்டி பேரூராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் மாபெரும் தடுப்பூசி முகாமில் தடுப்பூசி போடும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப, அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப, அவர்கள் இன்று (03.10.2021) திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகள், உடுமலைப்பேட்டை நகராட்சி பகுதிகள் மற்றும் திருமுருகன்பூண்டி பேரூராட்சி பகுதிகள் நான்காம் கட்ட கோவிட்-19 மாபெரும் சிறப்பு தடுப்பூசி முகாமில் தடுப்பூசி போடும் நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

*இது மாவட்ட ஆட்சித்தலைவர்*

*டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தாவது,*

திருப்பூர் மாவட்டத்தில் கோவிட்-19 நோயின் தாக்கம் கடந்த இரண்டு அலைகளின் போதும் அதிக பாதிப்பை எற்படுத்தி உள்ளது எனவே பொதுமக்களை நோயின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி போடும் பணிகள் நடைபெற்று வருகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் 20,77,095 உள்ளனர். இதுவரை 15,05,290 நபர்களுக்கு முதல் தவணையும், 3,62,823 நபர்களுக்கு இரண்டாம் தவணை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 5,71,805 நபர்களுக்கு முதல் தவணையும், 57,297 நபர்களுக்கு இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்தப்படவேண்டியுள்ளது. முதற்கட்டமாக 12.09.2021 அன்று நடைபெற்ற முகாமில் 1,23,163 நபர்களும், இரண்டாம் கட்டமாக 19.09.2021 அன்று நடைபெற்ற முகாமில் 89,379 நபர்களும், மூன்றாம் கட்டமாக 26.09.2021 அன்று நடைபெற்ற முகாமில் 78,974 நபர்கள், பயனடைந்துள்ளார்கள். மேலும் நான்காம் கட்டமாக இன்று 03.10.2021 மொத்தம் 81,120 நபர்களுக்கு தடுப்பூசி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த கோவிட்-19 சிறப்பு தடுப்பூசி முகாம், 631 நிலையான முகாம்களிலும், 41 நடமாடும் முகாம்கள் என 672 மையங்களில் காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை நடைபெற்றது. இம்முகாம்கள் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், ஊட்டசத்து மையங்கள், பள்ளிக்கூடங்கள், பஞ்சாயத்து அலுவலகங்கள், இரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள், டோல்கேட் ஆகிய இடங்களில் கோவிட்-19 தடுப்பூசி மருந்து இலவசமாக வழங்கப்பட்டது.

இப்பணிக்காக பல்வேறு துறைகளைச் சார்ந்த 2,688 பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபட்டுள்ளனர், இதற்கு தேவையான அடிப்படை வசதிகள், மருத்துவக்குழுக்கள், கண்காணிப்பு குழுக்கள், ஆகியோர் தொடர் கண்காணிப்பில் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. பொதுமக்கள் அனைவரும் திருப்பூர் மாவட்டத்தில் முழு ஒத்துழைப்புடன் தடுப்பூசி எடுத்துக் கொண்டனர். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இன்றைய தினம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குடிமங்கலம், புக்குளம், சுங்கார மடக்கு, பெதப்பம்பட்டி மற்றும் உடுமலைப்பேட்டை நகராட்சி பகுதிகள் மற்றும் திருமுருகன்பூண்டி பேரூராட்சிக்குட்பட்ட அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் மாபெரும் தடுப்பூசி முகாமினை ஆய்வு மேற்கொண்டு பொது மக்களுக்கு தாமதமின்றி தடுப்பூசி செலுத்துமாறு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

*வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.*